மல்லசமுத்திரம் மஹேந்ரா தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில், 348 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

மஹேந்ரா தொழில்நுட்ப கல்லூரி பட்டமளிப்பு விழா

● நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் மல்ல சமுத்திரம் மஹேந்ரா தொழில் நுட்பக் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில், 348 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

மஹேந்ரா தொழில்நுட்பக் கல்லூரி 12-வது பட்டமளிப்பு விழா, கல்லூரியின் மேலாண் இயக்குநர் பா. மஹா அஜய் பிரசாத் தலைமையில் நடந்தது. கல்லூரி முதல்வர் இளங்கோ வரவேற்றார். தசால்ட் சிஸ்டம்ஸ் இயக்குநர் ராஜிவ் அரமடகா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று 348 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

அப்போது அவர் பேசும்போது, 'மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற தனித்திறன், மொழிப்புலமை, அடிப்படை திறன், ஆளுமைத்திறன், துறைசார் கல்வி ஆகியவற்றில் முதன்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். புதுமையான சிந்தனையுடன் செயல்பட வேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்காக உங்களது கல்வி பயன்பட வேண்டும்' என்றார்.

விழாவில், செயல் இயக்குநர் சாம்சன் ரவீந்திரன், மஹேந்ரா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் செந்தில் குமார், புல முதல்வர் ஜெ.ராஜவேல், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

ராசிபுரம் – வநேத்ரா முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (தன்னாட்சி), கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கமும், செஞ்சுருள் சங்கமும் இணைந்து உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின.

உலக எய்ட்ஸ் தினம் குறித்து

முத்தாயம்மாள் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

● நாமக்கல்

ராசிபுரம் - வநேத்ரா முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (தன்னாட்சி), கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கமும், செஞ்சுருள் சங்கமும் இணைந்து உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின.

நாமக்கல், எச்ஐவி பாசிட்டிவ் மக்கள் நலச்சங்கத்தின் தலைவர், கவுசல்யா மற்றும் நாமகிரிப் பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய ஒருங் கிணைந்த ஆலோசனை மற்றும் சோதனை மையத்தின் ஆலோசகர், அன்புச்செல்வி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, மாணவ, மாணவியரிடையே எச்ஐவி (எய்ட்ஸ்) குறித்த விழிப்புணர்வு தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், கல்லூரியின் இயக்குநர் செல்வகுமரன், கல்லூரி முதல்வர் எஸ்.பி.விஜய்குமார், சமூக செயல்பாட்டு புல முதன்மையர் எம்.ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்கத்தின் ஒருங் கிணைப்பாளர் ந.ராதாகிருஷ்ணன் நிகழ்வை ஒருங்கிணைத்தார். விழிப்புணர்வு நிகழ்வில் கல்லூரி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வியர்க்குதே

ஈரோடு

- ஈரோடு, வில்லரசம்பட்டி, சூரியம்பாளையம், கவுந்தப்பாடி, கஸ்பாபேட்டை, எழுமாத்தூர், சிவகிரி, ஊராட்சிக்கோட்டை ஆகிய துணை மின் நிலையங்களில், பராமரிப்புப் பணி நடைபெறுவதால், இன்று (16-ம் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின்வாரியம் அறிவித்துள்ளது.இதன்படி ஈரோடு துணை மின் நிலையத்திற்குட்பட்ட, ஈரோடு நகர், வீரப்பன்சத்திரம், இடையன்காட்டுவலசு, முனிசிபல்காலனி, ஆசிரியர் காலனி, பெருந்துறை சாலை, சம்பத்நகர், வெட்டுக்காட்டுவலசு, மாணிக்கம்பாளையம், பாண்டியன்நகர், சக்திநகர், வக்கீல் தோட்டம், பெரியவலசு, பாப்பாத்திக்காடு, பாரதிதாசன் வீதி, முனியப்பன் கோயில் வீதி, நாராயணவலசு, டவர்லைன் காலனி, திருமால்நகர், கருங்கல்பாளையம், கே.என்.கே.ரோடு, மூலப்பட்டறை, சத்தி சாலை, நேதாஜி சாலை, காந்திஜி சாலை, பெரியார் நகர், ஈவிஎன் சாலை மற்றும் மேட்டூர் சாலை பகுதிகளில் இன்று மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.
- அதேபோல், வில்லரசம்பட்டி துணை மின் நிலையத்திற்குட்பட்ட, பாரதியார்நகர், வீரப்பம்பாளையம் மெயின்ரோடு, சூளை, அன்னை சத்யா நகர், முதலிதோட்டம், மல்லிநகர், ஈ.பி.பி.நகர் உள்ளிட்ட பகுதிகளிலும், சூரியம்பாளையம் துணை மின் நிலையத்திற்குட்பட்ட சித்தோடு, ராயபாளையம், ஆர்.என்.புதூர், பெருமாள்மலை, ஐஆர்டிடி கல்லூரி, மாமரத்துப்பாளையம், பிராமண பெரிய அக்ரஹாரம் உள்ளிட்ட பகுதிகளிலும் இன்று மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.
- அதேபோல, கஸ்பாபேட்டை, சிவகிரி, எழுமாத்தூர் மற்றும் ஊராட்சிக்கோட்டை துணைமின் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்று (16-ம் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படுவதாக மின்வாரிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள ரயில்களில் ஐயப்ப பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு

விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஈரோடு ரயில்வே போலீஸார்

● ஈரோடு

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங் களைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் பயணிக்க, கேரளாவிற்கு பல்வேறு ரயில்கள் இயக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான ரயில்கள் ஈரோடு வழியாகச் செல்கின்றன. இந்த ரயில்களில் பயணிகள் கூட்டத்தை விட, ஐயப்ப பக்தர்கள் கூட்டமே அதிகரித்து காணப்படுகிறது.

இந்நிலையில், ரயிலில் பயணிக்கும் ஐயப்ப பக்தர்கள், பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளும் வகையில், ஈரோடு ரயில்வே போலீஸார் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து ரயில்வே போலீஸார் கூறியதாவது: ஈரோடு மார்க்கமாக கேரளா செல்லும் ரயில்களில் ஐயப்ப பக்தர்கள் கூட்டம் அதிக அளவில் காணப் படுகிறது. பக்தர்கள் தங்கள் பயணத்தின் போது, கற்பூரம் உள்ளிட்ட எளிதில் தீப்பற்றும் பொருட்களைக் கொண்டு வழிபாடு செய்ய தடை விதிக்கப் பட்டுள்ளது. இது குறித்து ரயில்களில் பயணிக்கும் ஐயப்ப பக்தர் களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மேலும், ரயில் பெட்டிகளில் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்தி வருகிறோம். ஜனவரி 20 வரை விழிப்புணர்வு பணி தொடரும், என்று கூறினர்.

குண்டு மல்லி கிலோ ரூ.1,400-க்கு விற்பனை

● சேலம்

சேலம் வஉசி மார்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைவாக இருந்ததால், அவற்றின் விலை நேற்று அதிகரித்திருந்தது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால், பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வஉசி பூ மார்க்கெட்டுக்கு அவற்றின் வரத்து குறைந்துள்ளது. இதனால், பூக்களின் விலை அதிகரித்துள்ளது.

குண்டு மல்லி கிலோ ரூ.1,400, சன்ன மல்லி ரூ.800, சாதி மல்லி ரூ.480, காக்கட்டான் ரூ.450, மலை காக்கட்டான் ரூ.400, செவ்வரளி ரூ.240, நந்தியாவட்டம் ரூ.100, சம்பங்கி ரூ.120 என பூக்களின் விலை உயர்ந்தது, என்றனர்.

புயல் பாதித்த பகுதிகளில் பணிபுரிந்த தூய்மைப் பணியாளர்களுக்கு பாராட்டு

● நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சி சார்பில், 18-ம் தேதி முதல், 27-ம் தேதி வரை, மக்களின் குறைகளை கேட்க 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் குறித்து நேற்று நடந்த விளக்க நிகழ்ச்சியில், நகராட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர்

இந்நிகழ்வுக்கு முன்னதாக, மிக்ஜாம் புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தூய்மைப்பணி மேற்கொண்ட தூய்மைப் பணியாளர்களுக்கு பாராட்டு விழா நடந்தது.

வெள்ளம் பாதித்த பகுதியில் தூய்மைப் பணி மேற்கொண்ட தூய்மைப் பணியாளர்களுக்கு, நகராட்சித் தலைவர் நளினி, மாலை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார். இந்நிகழ்வில் நகராட்சி ஆணையர் மற்றும் கவுன்சிலர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

வரி விளம்பரங்கள்
பொது
விற்பனை
CCTV CAMERA
எங்கிருந்தும்
உங்கள் வீடு/ அலுவலகத்தை
மொபைலில் பார்க்கலாம்

ஈஸிடெக் டிஜிட்டல் சொலிசன்ஸ்
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88904
95009 30200
www.easytechcctv.com

HDFC BANK
We understand your world

HDFC Bank Limited
Regd Office: HDFC BANK HOUSE, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai-400013
Department for Special Operation
எண்.1546, கிளாசிக் டவர், 4வது தளம், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்-641018

இ-ஏல விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ், வங்கியில் அடமானத்தின் உள்ள அசையா சொத்துக்கான பொது இ-ஏல அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிசொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

HDFC பேங்க் லிமிடெட்-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்து, **கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர்களிடமிருந்து**, தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட், சேலம் மூலம் வழங்கப்பட்ட ஆணையின்படி சட்டம் 13(4) & பிரிவு 14-ன் சட்டத்தின்படி HDFC பேங்க் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு HDFC வங்கிக்குச் சேரவேண்டிய கடன் பாக்கிக்தொகையான **30.11.2023** அன்றுள்ளபடி **₹ 3,30,90,808.26** (ரூபாய் மூன்று கோடியே முப்பது லட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று எட்டு மற்றும் பைசா இருபத்தாறு மட்டும்) அதன் மீதான வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவை சேர்த்து வசூலிக்க கீழ்கண்ட விதிமுறைகளின் படி பொது ஏலம் மூலம் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை "**உள்ள இடத்தில் உள்ளவாறு**", "**உள்ளது உள்ளவாறு**", **உள்ளதெல்லாம் உள்ளவாறு, பின் தொடர்ச்சியாக வங்கியின் உதவியை நாடமுடியாது** எனும் அடிப்படையில் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் விற்பதற்கு உத்தேசித்துள்ளார். சொத்து விவரங்கள், ரிசர்வ் விலை & ஏல உயர்வு தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள் & ஜாமீன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி 1]M/s.துக்கரம் ஏஜென்சீஸ், பழைய எண்.79, புதிய எண்.4, எண். 79, அப்பாசாமி தெரு, செவ்வாப்பேட்டை, சேலம்-636002. **2]Mr.T.நாகேஷ்,** S/o.திவகரம் B துக்கரம், **3]Mr.N.கௌஷிக்,** S/o. T.நாகேஷ், **இருவரது முகவரி:** பழைய எண்.79, புதிய எண்.4, அப்பாசாமி தெரு, வினாயகர் கோயில் அருகில், செவ்வாப்பேட்டை, சேலம்-636002. **4]Mrs.N.ரமணி,** W/o.T.நாகேஷ், எண்.2/66, ஆண்டாள் தெரு, செவ்வாப்பேட்டை, சேலம்-636002. **5] Mrs.T.விஜயா,** W/o. துக்கரம், பழைய எண்.79, புதிய எண்.4, அப்பாசாமி தெரு, வினாயகர் கோயில் அருகில், செவ்வாப்பேட்டை, சேலம்-636002

அடமான சொத்து விபரம்

சேலம் மேற்கு பதிவு மாவட்டம் மற்றும் சேலம் மேற்கு ஜாயிண்ட்-3 சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட **சேலம் டவுன், B டிவிஷன், வார்டு 2,** தற்போதைய அரசு செட்டில்மெண்ட் படி புதிய வார்டு F, பிளாக் 9, T.S.எண்.22, சப் டிவிஷன் படி T.S.எண்.22/2, சேலம் மேற்கு தாலுகா, சேலம் மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள **2592 சதுர அடி நிலம் மற்றும் இதர அனுபந்த உரிமைகள் மற்றும் வழிப்பாதை உரிமைகள்.** "அப்பாசாமி பிள்ளை தெரு" விற்குள் எல்லைகள்: கணேசன் சொத்திற்கு வடக்கு, ஜெகதாதேவி மற்றும் மற்றவர்கள் சொத்திற்கு தெற்கு, வேல செட்டி தெருவிற்கு கிழக்கு, அப்பாசாமி தெரு மற்றும் ஜெகாதேவி மற்றும் மற்றவர்கள் சொத்திற்கு மேற்கு. **1வது தாக்கு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 24 அடி 6 அங்குலம், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 24 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 18 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 18 அடி. **2வது தாக்கு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 43 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 40 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 40 அடி 9 அங்குலம். **3வது தாக்கு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 36 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 35 அடி 9 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 5 அடி 9 அங்குலம், வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 3 அடி. **4வது தாக்கு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 10 அடி 3 அங்குலம், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 11 அடி 6 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 11 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 11 அடி.

ரிசர்வ் விலை: ₹ 2,66,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தாறு லட்சம் மட்டும்)
டேவணித்தொகை (EMD): ₹ 26,60,000/- (ரூபாய் இருபத்தாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)
ஏல உயர்வுத்தொகை: ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)

ஏல தேதி & நேரம்: 31.01.2024 - காலை 11.00 மணியிலிருந்து மதியம் 02.00 மணி வரை
(விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்)

EMD மற்றும் இதர ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் : 30.01.2024 மாலை 4.00 மணிக்குள்	சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்: 28.12.2023 - காலை 11.00 மணி

EMD Remittance : NEFT/ RTGS/Funds Transfer in HDFC Bank Ltd., E-AUCTION EMD ACCOUNT - Account No. 57500000904261, HDFC Bank Ltd, Department for Special Operations, Prince Khushal Towers, 7th Floor, B- Wing, No. 96, Annasalai, Chennai – 600 002 (IFSC Code No. HDFC0000240) Branch Name Sandoz House.

இ-ஏல விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு சேவை வழங்குனர்:
Mr.P.தரணி கிருஷ்ணா, Mob: 99481 82222, E-mail: andhra@c1india.com
சொத்து பற்றிய விவரங்களுக்கு:
Mr.A.சிவலிங்கம், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, Mobile No: 93458 86060, Email: sivalingam.a@hdfcbank.com
விதிகள் மற்றும் நிபந்தனைகளின் விரிவான விவரங்களுக்கு:
https://www.bankeauctions.com என்று இணையதளத்தை பார்வையிடலாம்.

SARFAESI சட்டம், 2002-ன் கீழ் 30 நாட்கள் அறிவிப்பு:
கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) உடன் கீழ் இந்த வெளியீடானது மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கான 30 நாள் அறிவிப்பு. மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை ஏலத்தேதி முன்னர் செலுத்தத்தவறினால் அந்த சொத்துக்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி: 14.12.2023
இடம்: சேலம்
அதிகாரபூர்வ அலுவலர்,
HDFC Bank Limited

வரும் 2024 புத்தாண்டு 'இந்து தமிழ் திசை' நாள்காட்டியுடன் இனிதாய் தொடங்கட்டும்!
இந்து தமிழ் திசை
NANDU
கலர் வேட்டி | லுங்கி | கர்சீப் | டவல்
இணைந்து வழங்கும்
2024 நாள்காட்டி

ஜோதிடர் பெருங்குளம் ராமகிருஷ்ணன் அவர்கள் கணித்த பஞ்சாங்கக் குறிப்புகளுடன்...
●முகூர்த்த நாட்கள் ●விரத நாட்கள்
●விஷேச நாட்கள் ●அரசு விடுமுறை நாட்கள் ●கரிநாள்
●சந்திராஷ்டமம் ●மாத ராசிநிலை கட்டம் ●ராகுகாலம்
●எமகண்டம் ●குளிகை ●நல்லநேரம் ●சூர்யோதய நேரம்
உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

24-12-2023 நாளிதழுடன்...
விலை ரூ.20
உங்கள் பிரதிக்கு பகுதி ஏஜென்ட் / கடைகளில் இன்றே சொல்லிவையுங்கள்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் முகவரி : எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	14.12.2023-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46039430000762 & 46039680000130	1) திரு. V. மணிகண்டன், 2) திருமதி. M. தென்னரசி	22-07-2022	05-07-2023	ரூ.17,20,256.71 (ரூபாய் பதினெழு இலட்சத்து இருபதாயிரத்து இருநூற்றி ஐம்பத்தி ஆறு மற்றும் பைசா எழுபத்தி ஒன்று மட்டும்)	01.01.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.6,75,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)	ரூ.67,500/- (ரூபாய் அறுபத்தி ஏழாயிரத்து ஐநூறு மட்டும்)	17.01.2024 நேரம்: 10.00 AM to 05.00 PM	16.01.2024, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.259/4/ 129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

அட்டவணை சொத்து : சேலம் மேற்கு RD, சூரமங்களம் சார் RD, சேலம் தாலுகா, போடிநாயக்கன்பட்டி கிராமம், அரசு மறு சர்வே எண்.77/4-ன்படி புஞ்சை ஏக்கர் 0.03 சென்ட், அசெஸ்ட் 0.07 நிலம், மற்றும் பின்வரும் **எல்லைகள் :** சர்வே எண்.55 தொடர்பான புறம்போக்கு நிலத்திற்கு **கிழக்கே**, தெற்கு வடக்கு பாதைக்கு **மேற்கே**, மோகன்ராஜ் சொத்திற்கு **வடக்கே**, ராமலிங்கம் மற்றும் பஞ்சாலி சொத்திற்கு **தெற்கே**. பின்வரும் அளவுகள்: கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 45 அடி, தெற்கு பக்கம் 35 அடி, தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் 12 அடி, மேற்கு பக்கம் 13 அடி, அளவுகள் 500 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், பழைய கதவு எண்.65, புதிய கதவு எண்.96, மின்சார இணைப்பு எண். 465-002-1001 மற்றும் அனைத்து வழக்கமான பாதை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட எளிதான உரிமைகள். சொத்தானது சேலம் கார்ப்பரேஷன் எல்லை, சொட்டையன் தெரு, சேலம் கார்ப்பரேஷன் மறுசர்வே-ன்படி வார்டு- U, பிளாக்-5, மற்றும் டி.எஸ்.எண்.62.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.பாஸ்கர் நாயுடு, தொடர்பு எண். 8142000809/8142000061. Email id: info@bankauctions.in / subbarao@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்கங்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. துரைமுருகன் (மொபைல் எண். 9841638849) email : durai.murugan@janabank.com, & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 9590858249), email: ranjan.naik@janabank.com,** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 16.12.2023, இடம் : சேலம்
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

படிவம் ஏ
பொது அறிவிப்பு
(திவால் நிலை மற்றும் இந்திய திவால் வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6 - ன் கீழ்)
ஸ்டால்வார்ட் இன்டர்நேஷனல் டிரேடிங் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

	தொடர்புடைய விவரங்கள்	
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	**ஸ்டால்வார்ட் இன்டர்நேஷனல் டிரேடிங் பிரைவேட் லிமிடெட்**
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	11/05/2012
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	ஆர்ஓசி, சென்னை, கார்ப்பரேட் விவகார அமைச்சகம்
4.	கார்ப்பரேட் அடையாள எண்/ கார்ப்பரேட் கடனாளரின் வரம்பிற்குட்பட்ட அடையாள எண்	U74999TN2012PTC085849
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்)	சிட்டி டவர், எண் 117, தரைதளம், ஸ்ரீ தியாகராய சாலை, தி நகர், சென்னை 600017, தமிழ்நாடு, இந்தியா.
6.	கார்ப்பரேட் கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	12/12/2023 (இடைக்காலத் தீர்மான தொழில் முறையாளருக்கு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்திட மிருந்து மின்னஞ்சல் மூலம் ஆணை பெறப்பட்ட நாள் 14/12/2023)
7.	திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி	ஜூன் 08, 2024 (180 நாட்கள்)
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	**திரு. P. ஈஸ்வரமூர்த்தி** Reg.No:IBBI/IPA-002/IP-N00284/2017-18/10842
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இட